Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஇ (1889) ஆவணி மீ 28 உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருது ளூ ஆவணிமீ உஉ வெள்ளிக்கிழமை (7 September. 1962) [இல-உஉ]

உலகியல் அலை

# வதந்திகள் மலிந்து மக்கள் மனக் குழப்பம்!

## சாண் சறுக்கி முழம் ஏறும் பீலிக்சின் யோகம்!!

**இன்று என்ன செய்தி என்று கேட்பதொழிந்து இப்பொழுது என்ன செய்தி என்று மக்கள் வீதிகள்தோறும் வினவியவண்ணம் நிற்க வதந்திகள் சோழக்காற்றிலே மிதந்தபடி உலவுகின்றன**

ஸ்ரீமா மகாதேசாதிபதியாகின்ருவாம். பீலிக்சுக்குப் பிரதமர் பதவியாம் என்ற கதை பாராளுமன்றத்து மக்கள் சபையிலும் பரவிவிட்டது.

பாராளுமன்றத்திலே வீராவேசம் ஒரு பக்கம். இரகசிய ஆலோசனைகள் மறுபக்கம்.

**எந்தப்பாம்பு எந்தப்புற்றுக்குள்!**

இலங்கை அரசியல் நிலைமை இன்று கலக்கத்தையே கொடுக்கின்றது. எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு என்ற விதமாக ஒருவரை ஒருவர் நம்பாத நிலைமை நிலவுகின்றது.

சாணேற முழஞ் சறுக்குவதென்ற பழமொழியின் எதிர்க்கருத்தை நிரூபிக்கப் பீலிக்சு சாண் சறுக்கி முழம் ஏறுகின்ருர் போலிருக்கிறது. எல்லாக் குற்றச்சாட்டுக்களுக்கும் ஏதோ மறுமொழி எடுத்துக்கூறிய வண்ணம் இருக்கின்ருர், இறுமாப்பு இம்மியளவும் குறையவில்லை! ஆணவத்தொனி அப்படியே காணப்படுகின்றது. என்னதான் நிகழ்ந்தபோதிலும் நான் நின்று பிடிப்பேன் என்பதே அவரின் இலட்சியம்.

**சிங்களமும் ஆங்கிலமும் ஒரு தாமாம்!**

சதி வழக்கில் முடிக்குரிய கட்சிக்காக நிகழ்த்தப்படும் உரையில் சிங்களத்துடன் ஆங்கிலமும் உத்தியோக மொழியென்று கூறப்பட்டது குறிப்பிடத் தக்கது. அப்படியானல் தமிழும் இருக்கவேண்டுமே! அந்நிய மொழிக்கு மன்னுரிமை அளிக்கலாம், ஆதியிலிருந்து அரசமொழியாய் வழங்கிய தமிழ் மொழிக்கு இடம் இல்லையாம். ——

## சிவஞானபோதம்

——:0:——

[ நவாலியூர் திரு. சோ. நடராசன் B. A. ]

மூற்ருெடர்—2

முதலாஞ் சூத்திரம்

அவனென்றும், அவளென்றும், அதுவென்றும் பகுத்துப் பலவாய்ச் சுட்டி உணரப்படுஞ் சொற்பிரபஞ்சமும் பொருட்பிரபஞ்சமுமாய இருகூற்றுப் பிரபஞ்சத் தொகுதி, தோற்றம், நிலை, இறுதி என்னும் மூத்தொழில் உடைமையால் ஒருவனல் தோற்றப்பட்டதாய உள்பொருளேயாம். அது தோன்றும்பொழுது, ஒடுங்குதற்குக் காரணமாய்நின்ற கடவுளினின்றும், சகச மலம் நீங்காமையால் அது நீங்குதற்பொருட்டு மீளத் தோன்றுவதாம். இவ்வாருதலின், இறுதியென்னுஞ் சங்காரத் தொழிலைச் செய்யும் கடவுளே உலகிற்கு முதற் கடவுள். ஏனையோர் முதற் கடவுளாகார் என்று அளவைநூற் புலவர் கூறுவர்.

இரண்டாஞ் சூத்திரம்

கடவுள் முற்கூறிய அவன் அவள் அது என்னும் பிரபஞ்சமாகி ஒன்ருய் அபேதமாய் நின்றும், அப்பிரபஞ்சத்துக்குத் தான்வேருமாய், உயிர்கள் முன்செய்த புண்ணிய பாவங்களினலே இறந்தும் பிறந்தும் வர, தன்னுடையதிருவருட்சத்தியினல் ஒழிவற நிறைந்து நிற்பான்.

மூன்ருஞ் சூத்திரம்

எவற்றையும் அன்று அன்று எனவிட்டு ஆன்மா இலது என்று நிற்பது உளது. ஆதலின் அதுவே ஆன்மாவாம். எனது உடம்பு என்று சொல்லுவதால் உடம்புக்கு வேருக ஆன்மா உளது. ஓசை முதலிய ஐம்புலன்களையும் செவி முதலிய இந்திரியங்களுடன் கூடி அறிதலால் வேருய் ஆன்மா உளது. மாயையினல் யாக்கப்பட்டு இயன்ற சூத்திரப்பாவை போலும் உடம்பினிடத்து அதற்கு வேருக ஆன்மா உளது.

நான்காஞ் சூத்திரம்

அந்தக் கரணமாகிய [illegible]

[illegible]

## நற் சிந்தனை

ஓங்கா ரத்தில் உதித்த உலகெலாம்

ஓங்கா ரத்தில் ஒடுங்கும் உண்மையே.

### புறப் பாவச் செயல்கள் வெளியீடு

எதிர்வரும் 12-9-62 புதன்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில், ஈழ நாட்டு திருவள்ளுவர் சங்கத்தினல் அச்சிடப்பட்ட "புறப் பாவச் செயல்கள்" என்னும் பிரசுரம் நல்லூர் முருகப்பெருமான் திருவடிக்கு சமர்ப்பணமாக வெளியிடப்படும் எனத் தெரிய வருகிறது ——

உ

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையரிந்ததன்மைதோன்றும்
மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தருேன்றுந்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்தருேன்றும்
பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனர்க்கே.

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருணுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானுன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## உள்ளம் தாமரையாக அருள்தேனுக வேண்டும்

"மனித சமுதாயத்தின் போக்கு நாகரிகமானது—லட்சியமானது; ஆனுல் உலகம் தன்னை நோக்கிவர விரும்புவதுபோல் தான் உலகத்தை நோக்கிப்போக, உலகத்தோடொட்டிப் பழக மனிதன் விரும்பவில்லை. நம் எண்ணங்களின் வளர்ச்சி நமக்கேற்ற எல்லாவற்றையும் நாகரீகமெனக் கருதுகிறது. சமுதாயம் ஏற்றுக்கொள்வதே நாகரீகம். இதை வள்ளுவன் அழகாகக் கூறுகின்ருர். நாகரீகத்தின் பரிபூரண மலர்ச்சியே சமயம்" இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் கண்டி — மத்தியமாகாண சைவமகா சபையில் 3-9-62 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு நடந்த திருமுறை விழாவில் ஆற்றிய சொற்பொழிவின்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது, "ஒரு வேடன் ஒரு கிளியைக் கொல்லவேண்டும், பிடிக்க வேண்டும, சுவைக்க வேண்டும் என்ற விருப்பத்தினுற் பிடிக்கிருன். அவ்வாறே இந்த உயிரும் ஐம்புல வேடர்களுக்குள் தவறுதலாக அகப்பட்டுத் தத்தளிக்கிறது.

எந்த ஒரு நூல் உலகத்தை உய்ய வைக்கிறதோ, அதுவே சாத்திரம் எனப்படும். திருமுறைகளும் அத்தகையனவே.

சேக்கிழாரும் அப்பரடிகளை "உலகம் உய்ய வந்தவர்" என்கிருர். இன்று கூடிநின்று வீண் குதர்க்கம் பேசுபவர்களை அப்பரடிகள் "சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்தீர் எனக் கேட்கிருர்.

பொலிஸ்நாய் இருக்கிறதே, அது இன்று மனிதனின் மணத்தைக்கொண்டு மனிதனை இன்னுர் எனக் கண்டு பிடிக்கிறது. இதனல் மனிதனுக்கும் மணம் உண்டு என்பதாகிறது. மனிதன் உள்ளே எண்ணும் எண்ணமெல்லாம் மணமாக வீசுகிறது. திருஞானசம்பந்தர் சென்ற இடமெல்லாம் சிவநாமம் பரவிற்றே. ஒரு செடியை மலருக்காக — மணத்துக்காக — தேனுக்காக வளர்ப்பது

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## கருணை புரிகுவாய்!

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: அம்சத்தொனி :: தாளம்: ஆதி

பல்லவி

கருணை புரிகுவாய் கணபதியே
கபிலேஸ் வரனருள் குணநிதியே (க)

அநுபல்லவி

அரு ளுதயமாய் அன்பரின் உளத்தே
அமர்வாய் இனிதே ஆனந்தம் விளைத்தே (க)

சரணம்

பெருகிய மும்மல பிணிகளை மடக்க
பிறவிகளாகிய பெருங்கடல் கடக்க
மருவிய பேரின்ப வழியிலே நடக்க
மற வாதுன்னடி மலர்க்கீழ்க் கிடக்க. (க)

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## பரிசளிப்பு விழா

சனிக்கிழமை, செப்டம்பர் 8-ம் தேதி 6-30 மணிக்கு

பிரதம பேச்சாளர்:

திரு. கு. பாலசிங்கம் C.C.S. (உதவிக்காரியதரிசி, திறைசேரி)

திருமதி. பாலசிங்கம், பரிசில்கள் வழங்குவார்

பெற்ருேர், பழைய மாணவர், ஆதரவாளர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

—கல்லூரி அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்
[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஷூ ஆவணி மீ
உஉ ௳ வெள்ளிக்கிழமை

## விபரீதத்தில் விபரீதம்!

இப்பொழுது எங்கள் நாட்டில் நிலவுகின்ற அரசியற் சூழ்ச்சிகளைப்பற்றிப் பாராளுமன்றத்தில் மக்கள் சபையில் எடுத்துக் கூறப் பெற்றனவற்றை உற்று நோக்கின் என்றும் எங்கும் இல்லாதவிபரீதநிலைமை இங்கு தோற்றி யிருப்பதாகக் காணப்படுகின்றது. ஆளுங் கட்சியினருக்குட் சூழும் பிரிவினைகள் அக்கட்சியைப் பொறுத்தவரையில்மட்டுமல்ல நாட்டின் அரசியல்நிலைமைபற்றியும்தாக்குகின்றன என்பதை யார் தான்மறுப்பர்?

தேசத்தின் செம்மைக்கும் நன்மைக்கும் ஆட்சி புரியப்பெறவேண்டிய இடத்திலே தனிப்பட்டமுறையிலே ஒவ்வொருவரும் ஆதிக்கத்தைக் கைப்பற்ற வழிதேடி நிற்கின்ற சீர்கேட்டைப்பார்த்தால் எந்த விதமான அரசியல்முறையுமில்லாமல் மக்கள் திக்கற்றவர்களாய் அலமந்து அல்லற்படவேண்டிய நிலைமை உண்டாகிவிட்டதே என்று கூறவேண்டியிருக்கிறது.

திடுக்கிடச்செய்யும் செய்திகளைப் பாராளுமன்றத்தின் உறுப்பினரே உரைக்கின்றனர். ஆனல் அந்த விபரீதத்தை விலக்க வழிவகைகளை ஆராய்ந்து சொல்பவர்கள் யாருமில்லையே. இதற்குக் காரணம் கட்சிகட்டும் மனப்பான்மை கட்டுக்கடங்காத வகையில் உறுப்பினரின் உள்ளங்களில் வேரூன்றிவிட்டதென்பதே. நாட்டின் நன்மைக்குப் பங்கம் வந்துவிட்டது, வரப்போகின்றதென்று ஒப்பாரி சொல்லி உரை நிகழ்த்துந் தலைவர்கள் ஒருங்குகூடி ஒற்றுமையை நிலைநாட்டவோ அல்லது ஒரு வழியைக் காணவோ எண்ணுகின்றாரில்லையே. தேசத்தின் சீர் பொருளாதாரத் துறையில் மட்டுமன்றி மற்றெல்லா வகைகளிலும் குறைந்து வருகின்றது. இந்த நெருக்கடியை அகற்றுவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வராதிருப்பது பரோபகார சிந்தை யின்மையையே குறிக்கின்றது.

ஆகவே எல்லாக் கட்சிகளும் சேர்ந்து பரோபகார அடிப்படையில் ஆட்சியை நிறுவுவதுதான் உகந்த வழி, உய்வுக்கான நெறியென்று அறிஞர்கள், அநுபவம் வாய்ந்தவர்கள் ...கின்றனர். இந்த மதிமொழி முதல் அமைச்சர் செவிகளிற் செல்லுமா? சென்று விட்டாற் பயன் விளையும் என்பதற்கையமின்று.

---

நல்லைக்கீர்த்தனம் — 13.

## சிந்தனை செய்து பாரடா முருகா!

★

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : மாண்டு : தாளம்: ஆதி

பல்லவி

சின்னவயதிலேநீ செய்த குறும்பை யெல்லாம்
சிந்தனை செய்து பாரடா — முருகா.

அநுபல்லவி

கன்னல் மொழியில் சிவன்காதில் உபதேசங்கள்
சொன்னதும் சொக்கனது நற்குரு வாகியதும் (சின்ன)

சரணம்

மாங்கனி வாங்கஅன்று மாமயில் மீதினிலே
மாநிலம் வலம்வந்தும் வீணிலே ஏமாந்தாய்
தீங்கடும் கோபங்கொண்டு ஆண்டியாய் வேடம்பூண்டு
தீனதயாபரனின் ஞானப் பழம் நீயாகி (சின்ன)

நாவல் மரத்திருந்து நாவில் சுடும்பழமோ?
நவில்சுடாத பழமோ நாடுவாய் எனஉதிர்க்க
ஆவல்மிகுந்த ஔவை அப்பழம் எடுத்துஊத
ஆனந்தமாகப் பாட்டி அதிகம் சுட்டதோஎன்று
(சின்ன)

ஓங்காரப் பிரணவத்தின் உட்பொருள் அறியாத
ஆங்காரப் பிரமனது அகந்தைதனை அழித்தாய்
பாங்கான வேலெடுத்து பர்வததைப் பொடித்தாய்
பூஞ்சோலை வாசம்மவும் புனிதநல்லையின் தேவே.

---

## மறைஞான சம்பந்தர் குருபூசை

—:0:—

[சைவபரிபாலன சபை நாவலர் நினைவுமண்டபத்தில் 1-9-62 ல் நிகழ்ந்த ஷை குருபூசை வைபவத்தில் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ வ, மு. இரத்தினேஸ்வர ஐயர் ஆற்றிய பிரசங்க சாரம்.]

சைவ சமயம் அநாதியானது. இச்சமயத்தை சமய குரவர்களும் சந்தான பரமாசாரியர்களும் வளர்த்தார்கள். சந்தான பரமாசாரியர்களின் முதற்குரு தக்ஷிணாமூர்த்தியே. பின் சத்திய ஞான தரிசனிகள் உபதேசத்தால் மெய்கண்ட தேவர்மூலம உலகத்தில் பல சாத்தரங்கள் தோன்றின. அருணந்தி சிவாசாரியரின் சீடருள் ஒருவர் மறைஞானசம்பந்தர். திருப்பெணாகடம் என்னுந் தலத்தில் வேதியர் குலத்தில் தோன்றியவர் மறைஞான சமபந்தர். வேதாகமாதி நூலுணர்ச்சியுடைய இவர் துறவியாக இருந்தார்.

சிதம்பரத்தை அடுத்த கொற்றவன் குடியில் வந்து தங்கியிருந்தார். அவர் சபாநாதப் பெருமானையே தியானிப்பவர். வீதியில் சில அடியாருக்குச் சித்தாந்த உபதேசம் இவர் செய்திருந்தார். அக்காலம் தில்லைவாழந்தணருள் ஒருவராகிய உமாபதி சிவனார் பூசை முடித்துப் பல்லக்கில் வந்தார். அது கண்டமறைஞான சம்பந்தர் "பட்டகட்டையில் பகல்குருடு" போகிறதென்றூர்.

அதிதீவிரதரபக்குவமடைந்திருந்தஉமாபதிசிவனார்காதில் இவ்வார்த்தை புகுந்து பெருஞானத்தை உண்டாக்கியது. உடனேபல்லக்கைவிட்டுவந்து மறைஞான சம்பந்தரை வணங்கினார். மறைஞானசம்பந்தர் உபதேசிக்கச் சிறிது தாழ்ந்தார். ஆனல் அவர் புறத்தே சென்றார். இவரும தொடர்ந்தார், நெசவு செய்வார் வீதியில் மறைஞான சம்பந்தர் சென்று பாவுநூலில் இடும் கஞ்சியை ஏற்றுப் பருகினார். இவரும் அவர் கையில் வழிந்த கஞ்சியைப் பருகினார். ஞானநெறியுடையவர் சிவத்தையேயன்றி உலக பைத்தியமுமற்றவராகவே திகழ்வர்.

மறைஞான சம்பந்தரின் உபதேசம பெற்று, உமாபதி சிவனார் எமக்குச் சைவ சித்தாந்த நூல்களை அருளினார்; பல அற்புதங்களுஞ்செய்தார்.

மறைஞானசம்பந்தர் திருக்காளாஞ்சேரியில் சென்று யோகம்புரிந்து வந்தார். ஒரு ஆவணிமாத உத்தர நட்சத்திரத்தில் சிவனடியடைந்தார். யோகமே உயர்வுதரும்.

உயிராவணமிருந் துற்றுநோக்கி
உள்ளக கிழியி னுருவெழுதி
உயிராவணஞ் செய்துன்
கைத்தந்தால்
உணரப்படுவாரோடொட்டி
வாழ்த்தி
அயிராவணமே ருதானேறி
அமரர்நாடாளாதேயாரூராண்ட
அயிராவணமே யெம்மம்மானே
னருட்கண்ணு னேக்காதா [ரின்
ரல்லாதாரே. (அப்பர்)

சந்தான பரமாச்சாரியர்கள்
திருவடி வாழ்க.

---

கொக்குவில் மேற்கு,
### மஞ்சவனப்பதி முருகப்பெருமான் ஆலய மகோற்சவம்

ஆவணி மீ 20-ந் திகதி (5-9-62) புதன்கிழமை துவஜாரோகணமாகிப் பத்துநாட்களும் வழமைபோல் திருவிழாக்கள்நடைபெறும 28ந்உ (13-9-62) வியாழக்கிழமை தேர்த்திருவிழா. காலை 9மணியளவில் சுவாமி தேரில் எழுந்தருளுவார். பத்துநாட்களும் பிரசங்கங்கள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. திரு. அ. க. வேலுப்பிள்ளை, பண்டிதவித்துவான் இ திருநாவுக்கரசு, பண்டிதர் மு. கந்தையா B.A. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை இ. பாலசுந்தரக்குருக்கள் B,A. செ. சின்னத்துரை B. A., கு. குருசாமி B. A. முதலிய சமய அறிஞர்கள் பிரசங்கத்தில் கலந்துகொள்கின்றனர்.

---

## சேதுப்பிள்ளையின் தமிழ்த் தொண்டு

[இந்துசாதனம் நடாத்திய சேதுப்பிள்ளை கட்டுரைப் போட்டியில் மாணவர் பகுதியில் முதல் பரிசைப் பெறும் கட்டுரை]

முற்றொடர்—2

'சாவிற் தமிழ் படித்துச் சாக வேண்டும், எந்தன் சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்பதற்கேற்ப வாழ்வு நடாத்திய பிள்ளையவர்கள், தமிழிலேயுள்ள உயர்ந்த நூல்களின் கருவூலங்களமைந்ததோர் நடமாடுங் கோயில் எனத் தக்கதாக விளங்கினார்கள் என்றால் மிகையாகாது. இவரது அருந்தமிழ்ப் படைப்புக்களுள் "ஊரும் பேரும்", "வீரமாநகர்", "தமிழின்பம", "தமிழ் விருந்து", "தமிழர் வீரம்", "தமிழ்நாட்டு நவமணிகள்", 'கடற்கரையிலே', 'கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர்", "அலையுங்கலையும்", "வேலும் வில்லும்", "திருவள்ளுவர் நூல் நயம்" என்னும் நூல்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும். இதுகாலவரைக்கும் தமிழ் அணங்கிற்கெனத் தம உயர்ந்த பதவி, பணம், வாழ்வு என்பவற்றை அர்ப்பணிததுப்பேச்சு, ஆராய்ச்சி, வள்ளன்மை எனும் பல்வேறு மணிகளால் தமி

வே. ஹரிதாஸ்

ழணங்கை அலங்கரித்துக் களித்த பெருமைக்குத் தாமே இலக்கணமாய் மிளிர்ந்தவர் பிள்ளையவர்கள்.

எழுத்துத்துறையில் எண்ணரிய புகழைப்பெற்றுவிட்ட பிள்ளையவர்களின் அறிவு, ஆராய்ச்சித் துறையினும் புகுந்து, ஆழ்கடலில் அமிழ்ந்தெடுத்த முத்துக்களையும், வலம்புரிச் சங்குகளையும போன்ற எத்தனையோ பெறுபேறுகளையும் முடிபுகளையும் பெற்றுத்தந்தது. எவ்வளவு ஆழம் செல்கின்றேமோ அவ்வளவு புதுப்புது நயங்களையும், கருத்துக்களையும் சுரந்து கொட்டும் கம்பராமாயணக் கவிதைகளுக்சத் தம் தெளிந்த, பரந்த ஆராய்ச்சிகளின் முடிபாகச் சுருங்கக் கூறி விளங்கவைக்கும் ஓர் சுருக்கநூல் அளித்துள்ளார்கள். வீரமாநகர் போன்ற நூல்களிலும் அவரது சொல்லாட்சியும், ஆய்வுத்திறனும், புலமையும் தெள்ளெனத் தெற்றுகின்றது. பிள்ளையவர்களின் சொல்லாட்சி மிக்க செந்தமிழ் நூலான "தமிழின்பம்" 1955-ல் வெளிவந்த சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டு இந்திய ஜனதிபதியின் பரிசைப் பெற்றது. பிள்ளையவர்கள் தமிழின்பால் எத்துணைபற்றுக்கொண்டிருந்தாரோ, அத்துணைப்பற்றுத் தமிழ்நாட்டிலும் கொண்டிருந்தாரென்பது பின்வரும் மொழித்தொடர்மூலம் அறியக்கூடியதாயுள்ளது. தேச பக்தியும், மொழிப்பற்றும் ஒருங்கே உடலிற்பாயத் தமது சொந்த வாழ்க்கையை நாட்டுக் கர்ப்பணித்த உயர்திரு வ. உ. சிதம்பரனார் அவர்கள் சிறைச்சாலையிலே வாடும் போது கூறியுள்ளதாகிய மொழிகளைச் சேதுப்பிள்ளையவர்கள் தமக்கேயுரித்தான உயர்ந்த இனிய நடையில் தருவதைப்பாருங்கள்;- 'சிறைச்சாலையிலே செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத்தோல் உரியக் கல்லுடைக்கும்போது என் கண்ணீரை மாற்றியது கன்னித்தமிழன்றோ? சிறைக்கோட்டத்தில் வேலையொழிந்த வேளைகளில் தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன்? வள்ளுவர் குறளைப்படித்து உள்ளம் தழைத்தேன். பாரதநாடு சுதந்திரம் என்று துடிக்கின்ற என்னை அரசாங்கம் சிறைக் கோட்டத்தில் அடைக்கலாம, துச்சமாக எண்ணித் தூறு செய்யலாம், ஆயினும் நாட்டிலே வீரவிடுதலை வெள்ளம் புறப்பட்டுவிட்டது! அதன் வேகததைத் தணிக்க யாரால் முடியும்? எரிமலையைத் தடுக்க — அதன் வாயை அடக்க எவரால் முடியும்?"1

இக்காலத்தைப் போன்று அக்காலத்தில் பேச்சுவன்மை படைத்தவர்கள் மிகச்சிலரே. 'வார்த்தை ஆயிரத்துள் ஒருவர்' எனத் தக்கதாகப் பிள்ளையவர்கள்தான் அந்நாளில் நாவன்மை மிக்க தமிழ் அறிஞராக இருந்தார்கள். எனவேதான் திருவாவடுதுறை ஆதீனத்தார் பிள்ளையவர்களுக்குச் 'சொல்லின் செல்வர்' என்று பட்டம் வழங்கினர். இவர் சைவ நெறியையும் போற்றினார் என்பது வெள்ளிடைமலைபோன்று விளங்குகின்றது. ஏனெனில் பெரிய புராணம்பற்றி அண்ணாத்துரையுடன் அவர்நிகழ்ததிய வாதம் 'தீபரவட்டும்' எனும் நூலில் இடம் பெற்றுள்ளமையே போதிய சான்று பகரும். 'லெக்ஸிகன்' பேரகராதி அனுபந்தமும், தென்மொழி புத்தகடிரஸ்டு மூலம்

(தொடர்ச்சி 3 ம் பக்கம்)

---

## அடைவு நகை ஏலவிற்பனவு

அரசாங்க உத்தரவுடன் வீ. தம்பிப்பிள்ளை அன்ட் திருமதி சிவகலை கனகரெத்தினம் என்னும் விலாசத்தில் ஊர்காவற்றுறை கரம்பனில் அடைவு பிடிக்கும் அடைவு கடையில் 1959ம் ஷூ வைகாசிமீ 2-ம் தேதி தொடக்கம 1960 ம் ஷூ மார்கழி மீ 29 ம் தேதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்க்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1962 ம் ஷூ ஐப்பசி மீ 6 ம் தேதி சனிக்கிழமை முற்பகல் ஒனபது மணி தொடக்கம் ஷை அடைவுகடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர், 1962ம் ஷூ புரட்டாதி மீ 4-ம் தேதி

வை. ஏரம்பமூர்த்தி
(Auctioneer)
ஏல விற்பனையாளர்.

M. 103 7. 14-9-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேதுப்பிள்ளையின் தமிழ்த் தொண்டு

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வெளிவந்த கவிதைக்கொத்தும் பேராசிரியரால் பதிப்பிக்கப்பெற்றவை.

தமிழ வசன நடையை எதுகை மோனையுடன் இணைத்துச் சிறப்பித்து அதனின்றும் பிறழாதவாறு அதற்கோர் உயிர்த்தத்துவம் படைத்த பெருமை செல்வரையே சாரும், இதனாலேயே இவர் வசனநடை கைவந்த வல்லவர் எனப் பல்லோராலும் போற்றப்படுகின்றார். பாரதியாரின் கலைமகள் பாடலுக்குச் செல்வர் தரும் விளக்கம் வாசிக்கும் வாயெல்லாம் தேனூறும் இனிமை பயப்பதாகும். இதோ உதாரணம்:- "செஞ்சொற் கவி யியற்றும் கவிவாணர் கருத்திலும், உள்ளொளி வாய்ந்த உரவோர் மனதிலும், உலகினர்க்கு ஒளி நெறி காட்டும் உயரிய மறையிலும் கீதம்பாடும் குயிலின் குரலிலும் அமர்ந்திருக்கின்றாள். அன்றியும் மாடகூடங்களை அணி செய்யும் ஓவியங்களிலும், கண்ணைக் கவரும் சிற்பமும் ஓவியமும் அறிவுத் தெய்வம் உறையும் இடங்களாகும்."[2] உள்ளத்தில் ஒளி உண்டானால் வாக்கினிலே ஒளி உண்டாகும் என்பது பாரதியார் வாக்கு. இவ்வுண்மையொளி கட்டுரை, ஆராய்ச்சி கவிதை, மேடைப் பேச்சு என்பவற்றிற்கு முக்கியமானதாகும். இவையத்தனையிலும் எதுகை மோனையைப் புகுத்தி அமரத்துவம் பெறச் செய்தவர் சொல்லின் செல்வர் அவர்களே.

தமிழ் இலக்கியத்துறைக்கும், ஆராய்ச்சித்துறைக்கும், மொழியியல்துறைக்கும் செல்வரவர்கள் ஆற்றியிருக்கும் பணி பெரிது, நிலைபேறுடையது, வருங்காலத் தமிழகம் நினைந்து நினைந்து போற்றத் தக்கது

"காலத்தினாற் செய்த
நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்ற நன்றியுணர்ச்சியோடு நற்றமிழர் நெஞ்சில் நிற்க வேண்டியது. செந்தமிழன்னையினருளால் அவர்கள் சேர்த்த செல்வமனைத்தும் தமிழ் நாட்டிற்கே பயன்படவிருக்கிறது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களுக்கு அவர் ஐம்பதினாயிரம் ரூபாய் வழங்கிய செய்தி எல்லாருக்கும் தெரியும். யாருக்குமே தெரியாமல் அவர்கள் வழங்கியிருக்கும் கொடைகள் பலவுள. எனவே பிள்ளையவர்களின் வெள்ளிவிழா மலரில், சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஏ, லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் கூறிய 'திரு. சேதுப்பிள்ளை அவர்கள் வலதுகரம் கொடுப்பது இடதுகரத்திற்கே தெரியாது' என்ற கூற்று மிகப் பொருத்தமுடையதாக அமைந்தது.

தமிழ்த்தாயின் தலைமகனாராம் ரா. பி. அவர்களின் பேச்சு அளந்து தெளிந்து குளிர்ந்த அருவிப்பேச்சு. அவர் எப்பொருளை விளக்கினாலும் அது நம் மனத்திரையில் சொல்லோவியமாக நடமாடும். இவர் எதுகை மோனை நயத்தைத் தமிழ் மேடைகளில் தந்த தன்னேரில்லாப் பேச்சாளர், எளிய இனிய நடையில் தமிழ் உரைநடையை வளர்த்த ஈடில்லா எழுத்தாளர். காணவரும் எவரையும் கவர்ந்துகொள்ளும் உரையாடற் கலை வல்லார். வைதாரையும் வாழ வைக்கும் பெருந்தகையாளர், பகைவர் திறனையும் போற்றும் பண்பாளர். வைத்திருந்த செல்வமனைத்தையும் வாரிவாரி வழங்கிய வள்ளல். இவை எல்லாவற்றிலும் மேலாக ஒவ்வொருவரும வழிகாட்டியாக் கொள்ளத்தக்க தந்தைபோல்வார் - பெரியார் - பேராசிரியர்.

"தமிழுக்குத் தொண்டு
செய்வோர் சாவதில்லை
தமிழ்த்தொண்டன் பாரதிதாசன்
செத்ததுண்டோ."

என்பதுபோல் செந்தமிழுக்கோர் சேதுப்பிள்ளை எனும் புகழ்வாய்ந்த அவர்கள் இறக்கவில்லை! தமிழ் உள்ளளவும் தமிழ்த்தாயின் தலைமகனார் நல்ல தமிழ் உள்ளங்களில நன்றியுணர்ச்சி உள்ள தமிழ் நெஞ்சங்களில் — கோயில் கொண்டிருப்பார்.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின், நன்மை கடலிற் பெரிது," என வாழ்வார்கள் - தமிழை வாழ்விப்பார்கள் - தமிழர்க்கு நல்வழி காட்டுவார்கள்.

வாழ்க தமிழ்மொழி!
வாழ்க செந்தமிழ்ச் சேதுவின்
நாமம்!!

1 'அலையும் கலையும்'-கட்டுரை, பாண்டிநாடு—பக்கம்-27.
2 'தமிழின்பம்'-கட்டுரை, கலையின் விளக்கம்—பக்கம்-249.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
நல்லூர் காத்திகேசு இரத்தின சபாபதி - வழக்காளி
எதிராக
வழ. இல. M B 3393
பூநகரி மட்டுவில்நாடு
இளையதம்பி இராமலிங்கம்
- எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3393 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணி 1962ம் ஆ செப்ரெம்பர் மீ 29உ (29-9-62) சனிக்கிழமை முற்பகல் 11-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 880-ம் மேலும் 500 ரூபாவுக்கும் 26-5-60 திகதி தொடக்கம் 27-10-60 வரைக்கும் வருடமொன்றுக்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரைக்கும்வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 193-27 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் பூநகரிப்பகுதி பூநகரி கோவிற்பற்று மட்டுவில்நாடு இறை "வெள்ளாளன் தறை" நெற்பரப்பு 45. இதற்கு எல்லை கிழககு சரவணமுத்து சுப்பிரமணியத்தினுதனம். வடக்கு சின்னத்தம்பி மனைவி லெட்சுமியினுதனம். மேற்கு தண்ணீர் வாய்க்கால், தெற்கு வயித்திலிங்கம் செல்லத்துரையினதும் பங்காளர்களதும் ஆதனம். யாழ்ப்பாணம் முற்பதிவு G 30/74.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
643 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம், 16-8-62.
M 102 7-9-62.

---

### மயிலிட்டிக் கிராம சபை கலை, உடல் வளர்ச்சிக் கழக விளையாட்டுப் போட்டி

மேற்படி விளையாட்டுப் போட்டி 2-9-62 ஞாயிற்றுக்கிழமை மாலை 2-30 மணியளவில், மயிலிட்டிக்கிராம சபைத்தலைவர் திரு, சு. பாஸ்கரன் தலைமையில் குரும்பசிட்டி சன்மார்க்கசபை தம்பியையா ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நிகழ்ந்தது. மயிலிட்டிக்கோவிற்பற்றிலுள்ள பல விளையாட்டுச் சங்கங்கள் போட்டிகளில் பங்குபற்றிச்சிறப்பித்தன. இப்போட்டிக்கு, தெல்லிப்பழை சுகாதாரப்பகுதி அதிகாரி டாக்டர் யே சீ. துரைசிங்கம் பிரதம விருந்தாளியாக அழைக்கப்பட்டார். அவர் பேசும்போது: உடல் வளர்ச்சிக்கும், கல்விக்கும் விளையாட்டுகள் அத்தியாவசியம் என்றும், இப்படியான போட்டிகளை ஒவ்வொரு கிராமத்திலும் நடத்தவேண்டுமென்றும் கூறினார்.

வெற்றிபெற்ற கழகங்களுக்கு அவரால் பரிசில்கள் வழங்கப்பெற்றன.

### இந்துமாமன்றம் ஆண்டு விழா

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் ஆண்டு விழாவும், பொதுக்கூட்டமும், எதிர்வரும் ஞாயிற்றுககிழமை (9-9-62) மாலை 4-30 மணியளவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற இருக்கிறது இவ்விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், திருவாசகமணி K. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள் எனத் தெரியவருகிறது.

---

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

---

இவ்வாரம் (9-9-62 — 15-9-62)

## உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நிலபுலங்களால் இலாபம் உண்டாம். அந்நியரும் அயலவரும் மிக உதவியாக இருப்பர். பண இலாபங்களும் ஏற்படலாகும். ஆனால் குடும்பஅமைதிஇருக்காது.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இரகசிய எதிரிகள் மூலமான தொல்லைகளுக்கு இடமுண்டு. தந்தையாரின் உடல்நிலை பாதிக்கப்படும். வழமையான வேலை ஒழுங்கில் சில மாற்றமும் ஏற்படும். பணமளவில் ஓரளவு நல்ல வாரம். ஞாயிறும் திங்கள் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

மிதுனராசி மிருகசீரிடம், 3 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

ஞாயிறு புதிய முயற்சிகளுக்கு ஏற்றது. திங்கள் செவ்வாயும் புதன் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும். வார மிகுதி நாள் நல்ல முடிவைக் கொண்டுவரும்.

கடகராசி புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

குடும்ப நிலைமை தொடர்ந்து குழப்பமாகவே இருந்துவரும். செலவுகள் பெருகும். மன நிம்மதி இருக்காது. புதன் மாலையும் வியாழன் வெள்ளியும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும். நண்பர்கள் இக்கட்டிலிருந்து உம்மைக் காப்பாற்றுவர்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

உமது தம்பி தங்கையர் பெருமளவில் உதவி செய்வர், கல்வி. ஈடுபாடுகளில் வெற்றி உண்டாம் தடைகளையெல்லாம் உம்மால் தாண்டிவிட முடியும், கடைசி நாளை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

கன்னிராசி உத்தரம் 2, 3 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணநிலை சீர்திருந்த வேண்டும். உம்மை இக்கட்டிலிருந்து நண்பர்கள் காப்பாற்றுவர்- ஆனால் மன நிம்மதி இருக்காது, அயல தேசத்தவரும் உதவியாக இருப்பர்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

பணமளவில் ஒருநல்ல வாரம். புதிய முயற்சிகள் நல்விளைவைக் கொண்டு வரும். புகழும் சமூக வெற்றியும் உண்டாம். ஆனால் தந்தையாரின் உடல்நிலை பாதிக்கப்படும்.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

விவசாய வெற்றி தொடர்ந்து இருந்துவரும். நண்பர்கள் இக்கட்டிலிருந்து காப்பாற்றுவர். சிறு உடல்நிலைககுழப்பஙகளுககு இடமுண்டு தூற்றித திரிவோர்பற்றி எச்சரிக்கையாக இருந்துகொள்க.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்பத்தகராறு தொடர்ந்து இருந்துவரும். நண்பர்களுடனும் உறவினருடனும் தவறான விளக்கங்கள் ஏற்படும், உமது உடல்நிலை பாதிக்கப்படும். எதிர்ப்பாலைச் சேர்ந்த நண்பர்கள் உதவியாக இருப்பர்.

மகராராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

பண இலாபங்கள் உண்டாம். எதிரிகளுககு இடையூறும் விவசாய ஈடுபாடுகளில் வெற்றியும் உண்டாம். ஆனால் சிறு உடல்நிலைக் குழப்பங்களும் ஏற்படலாகும். குடும்பநிலை திருப்திகரமாயிருக்காது.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

தந்தைவழி உறவினர் மிக உதவியாக இருப்பர், எதிரிகளுக்கு இன்னல் நிச்சயம். ஆனால் சிறு உடல்நிலைககுழப்பங்கள குறிப்பாக வயிற்றுக கோளாறுகள் உண்டாம். செலவுகள் பெருகும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

குடும்ப நிலை மெல்ல மெல்லத் திருந்தும், அந்நியரும் அயலவரும் உதவியாகஇருப்பர். ஆனால் உடல்நிலை தொடர்ந்து பாதிககப்பட்டிருக்கும். வயிற்றுக்குழப்பங்களுக்கு இடமுண்டு.

---

### விநாயகர் சதுர்த்தி

சென்ற திங்கள் 3-9-62 தமிழ்மக்கள் வாழும் இடங்கள் தோறும், விநாயகர் கோயில்களிலெல்லாம், விநாயகர் சதுர்த்திப் பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

### ஜெயந்தி நகரில் சைவ ஆர்வம்

கொழும்பு சிந்துப்பிட்டி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சென்ற சில மாதங்களாக, ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலை நேரங்களில் பிரபல சமய அறிஞர்களால் சமயச்சொற்பொழிவுகள். கூட்டுப்பிரார்த்தனைகள் முதலியவை ஒழுங்காகவும் சிறப்புறவும் நடாத்தப்பெற்று வருகின்றன.

இம்மாதம் 2-ம், 9-ம், 16-ம், 23-ம், 30-ம் திகதிகளில் முறையே திருவாளர்கள் குப்புசாமிப்பிள்ளை, சுன்னாகம் நா. ப. பாலச்சந்திரன், நவாலியூர் நடராசன் B. A., V. திருஞானசம்பந்தர் ஆகியோர் நிகழ்ச்சிகளை நடாத்துவர்.

---

### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 6891-ம் இலக்க வழக்கில் 1962-ம் ஆ ஆவணி மீ 24-ம் உ யைக்கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிககப்பட்டிருக்கும் ஆதனம் 1962-ம் ஆ ஐப்பசி மீ 11-ம் உ வியாழககிழமை முற்பகல் 9 மணி வரையில் அந்தக்காணிக்குள நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

புலோலி மேற்கு
பூதத்தம்பி வல்லிபுரம்
—வழக்காளி

புலோலி மேற்கு

1. முருகுப்பிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளை
2. செந்திநாயகம் கைம்பெண் சின்னத்தங்கம்.

காலஞ்சென்ற அவவின் புருஷன் முருகுப்பிள்ளை செந்திநாயகத்தின் ஆதனத்துக்கு காரியஸ்தி என்ற வகையில் —எதிராளிகள்.

அறவிடவேண்டிய
தொகையின் விபரம்

சித்தாரித்த தொகை ரூபா 1180. 30-11-60 தொடக்கம் 3-8-61 வரைக்கும் ரூபா 600-க்கு 10 வீத வட்டி ரூபா 45. 3-8-61 தொடக்கம் 25-7-62 வரைக்கும் ரூபா 1225-க்கு 5 வீத வட்டி ரூபா 58. கோட்டுச்செலவு ரூபா 294-63. மொத்தம் ரூபா 1577-63.

ஆதனம்

புலோலி மேற்கு மழவராய குறிச்சியிறை நெடுங்குள வெளித்தெனிதென்மேற்கில் வடமேற்கு நில. பர. $50\frac{1}{2}$. இதில் வடக்கரை வாசியில் கிழக்குப்புறமாக $\frac{1}{4}$ பங்குக்கு நி. பர. 6, குளி 5 5/8 பனைகள் கிணறும் எல்லை கிழக்கு பூதத்தம்பி கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு பொன்னையா பெண் சிவகாமிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு நடராசா பெண் சேதுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு மாயக்கைப்பிள்ளையார் கோவிலுக்கும் மறுபேருககுமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் அடங்கலிற் சொரியலாய் $\frac{1}{3}$ பங்கும் கிணற்றில் சொரியலாய் 14/48 பங்கும்.

S. C. Kanagasabai
கொம்மிசனர்
புலோலிகிழக்கு, 30-8-1962.
M. 99 7-9-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானபோதம்

முதற்பக்கத் தொடர்ச்சி)

காரம் என்பவற்றுள் ஆன்மா ஒன்றன்று. அவ்வந்தக்கரணங்களுடனே ஆன்மா கூடி நின்று செம்பிற் களிம்புபோலச் சகசமாய் நிற்கின்ற ஆணவ மலத்தாலே ஒன்றையுமறியாது மந்திரிகளுடன் கூடி நின்று தொழிலை நடத்தும் அரசன் போலச் சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற ஐந்தவத்தையும் பொருந்தும்.

ஐந்தாஞ் சூத்திரம்

முன்னே கூறப்பட்ட ஆன்மா மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஞானேந்திரியங்கள் தத்தம் விடயங்களை இஃது இன்னதென்று அளவிட்டறிந்தும் அங்ஙனமறிகின்ற தம்மையும், தம்மைச் செலுத்து முயிரையும் அறியமாட்டாது. அவ்விந்திரியங்களைப் போல உயிர்களுமவத்தையினின்று வினைப்பயன்களையறிந்து அநுபவிக்கும் தம்மையும் தம்மைச் செலுத்தும் திருவருளையும் அறியமாட்டா. காந்தங் கண்ட இரும்பு அதன் சந்நிதி மாத்திரையில் இழுத்துக் கொள்ளப்படுவது போலக் கடவுளின் சந்நிதி மாத்திரையினால் உயிர்கள் அப்படி உணர்தலாம். ஆதலால் அதுபற்றிக் கடவுள் விகாரியாகார்.

ஆறுஞ் சூத்திரம்

முதற்பொருள் அளவைகளால் அறியப்படும் இயல்பினதெனின் அங்ஙனம் அறியப்படும் பிரபஞ்சம் போல அழி பொருளாகிய அசத்தாம், எவ்வாற்றானும் அறியப்படாத இயல்பினதெனின் சூனியமாம். (முயற் கோடுபோல) இவ்விரு பகுதியுமன்றி ஒருவாற்றான் அறியப்படாமையும் ஒருவாற்றான் அறியப்படுதலுமாகிய இரண்டு வகையாலும் சிவசத்தாமெனக் கூறுவர் மெய்யுணர்வின் நிலைபெற்றுயர்ந்தோர்.

ஏழாஞ் சூத்திரம்

சிவத்தின் சந்நிதியில் அசத்தெல்லாஞ் சூனியமாகலின் சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிதல் செய்யாது. அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாததுமாகலின் (சத்தாகிய சிவத்தை) அறியாது. ஆதலால் இருதிறனறிவுள்ளது ஒன்றுண்டென்பது (பாரிசேட அளவையாற் பெறப்படுதலின்) அதுவே சத்தாதற்றன்மையும் அசத்தாதற்றன்மையுமாகிய இரண்டுமன்றிச் சதசத்தாயுள்ள உயிராம்.

எட்டாஞ் சூத்திரம்

உயிர், தான் முன்னே செய்துகொண்ட புண்ணிய விசேடத்தால், தனக்கு அந்தரியாமியாகி இதுகாறும் உள்ளே நின்று உணர்த்துவித்த முழுமுதற் கடவுளே குருவடிவங் கொண்டெழுந்தருளி வந்து சிவதீக்கை செய்து (மன்னவன் குமரனாகிய நீ) ஐம்பொறிகளாகிய வேடருட் பட்டுவளர்ந்து அயர்ந்தனை. நின் பெருந்தகைமையை அறியாது இடர்ப்பட்டாய். நின் பெருந்தகைமையாவது இவ்வியல்பினதென்று அறிவிக்க, அறிந்தவுடனே, அவ்வேடரை விட்டு நீங்கி, அநந்நியமாந் தன்மையில் நிலைபெற்று அம்முழுமுதற் கடவுளின் திருவடிகளைச் சேரும்.

ஒன்பதாஞ் சூத்திரம்

குறையுணர்வாகிய பசு அறிவாலும், பாச அறிவாலும் உணரப்படாத பதியை அவனது திருவடி ஞானத்தால் தன்னறிவின்கண்ணே யாராய்ந்தறிக, (நில முதல் நாதமீறாகிய) பாசக் கூட்டம் நின்றுழிநில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடையபேய்த்தேரின் இயல்பிற்றாய்க் கழிவதென்று (அத்திருவடி ஞானத்தா) லறிந்து நீங்கவே, அப்பதிஞானம், பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். திருவைந்தெழுத்து அவ்விதிப்படி அறிந்து கணிக்கப்படும்.

பத்தாஞ் சூத்திரம்

ஞானக்கண்ணாற் காணப்பட்ட அம்முதல்வன் தானேயாய் ஒற்றுமைப்பட்டு உயிர் வழிநின்ற அப்பெத்த நிலைபோல் அவனோடு ஒற்றுமைப்பட்டு அவ்விறைபணியில் வழுவாது நிற்பின் மாயை மலம் என்னுமிரண்டனோடு வலிய கன்மமலமும் இல்லையாயொழியும்.

—தொடரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

புங்குடுதீவு மேற்கு வயிரமுத்து முத்துக்குமாரு

—வழக்காளி.

இல M B 3502

எதிராக

1. புங்குடுதீவு மேற்கு வீ. வல்லிபுரம் நல்லதம்பி
2. ஷியூர் பெண் நாகம்மா

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3502ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1962ம ஷு ஐப்பசி மீ 10ம் திகதி புதன்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் முதலாம் காணியும் பத்துமணிதொடக்கம் இரண்டாம் காணியும் பதினொரு மணி தொடக்கம் மூன்றும் காணியும் அந்தந்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 2995-ம் ரூபா 1500 க்கு 12-7-60 தொடக்கம் 6-12-60 வரை 15 விதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 222-83 சதம். ரூபா 1500/- 5-8-61 இல் கோட்டுச் செலவில் ரூபா 150-ம் கொடுபட்டது.

காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுககோவிற்பற்றுபுங்குடுதீவு மேற்கிறை "மணற்காடும்,மணற்காட்டுக்குத் தெற்கும்" மேற்குப் பாகத்தில் பர நீ, இல ஏழு குளி எட்டு (பர. நீ. இல 7 குளி 8) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு அரசாங்க வைத்தியசாலைக்குரியவாதனம். வடக்கு கையொழுங்கை. மேற்கு கையொழுங்கையும் சண்முகம் நாகனாதிக்கும் பங்காளர்கட்கும் மறுபேர்கட்குமுரியவாதனம். தெற்கு கடற்கரை. ஆனால் இக் காணிக்கூடாகப் போகும் ரேட்டுப் பிறநீங்கல்.

(2) ஷிபுங்குடுதீவு கிழக்கிறை 'கொட்டைக்காடு' வடக்குப்பாகத்தில் பர நீ இல பத்து (பர. நீ. இல 10) செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு தோனை செவயித்திக்கும் தாவீதன் பெண் ஆனசிக்கும் பங்காளர்கட்கும் தீயோகு கைம்பெண் விக்ரோறியாவிற்கும் பங்காளர்கட்குமுரிய வாதனங்கள். வடக்கு ரேட்டு, மேற்கு சஞ்சுவான் சூசைக்குப் பங்காளர்கட்கு முரிய வாதனம். தெற்கு மைக்கேல் மகள் மாகறற்றம்மாவிற்குரியவாதனம். இதடங்கலிற் சொரியலாயரைவாசி

(3) ஷி புங்குடுதீவு மேற்கிறை "ஞானயார்க் கூடலுக்கு வடக்கு' இரண்டு றூட்ஸ் பதினாறரை பேர்ச் (2 றூட் 16½ பேர்ச்) வீட்டிற்குப் போட்ட அத்திவாரக கட்டும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி தம்பையாவிற்கும்பங்காளர் கட்குமுரியவாதனம். வடக்கு கேணியும் ஏ, எஸ். எம். அருக்காஞ்சிக்கும் பங்காளர்கட்குமுரிய வாதனம். மேற்குரேட்டு தெற்கு இராமனாதன் மகள் செல்லாச்சிக்குரிய வாதனம்.

காரைநகர்:

1962-ம்ஷு ஆவணிமீ 4-ம்வ

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

---

இந்துசாதனம்

### நல்லூர்க்கந்தன் சமயப் போட்டி—2.

—————0—————

பங்குபற்றுபவர் பெயர்: ______________________

முகவரி: ______________________

எழுதும் விடைகள் தொகை: ____________

திகதி: ____________

______________________
கையொப்பம்,

இதுவரை பல நேயர்கள் போட்டிக்கு விடைகள் அனுப்பியுள்ளனர். இன்னும் அநேக அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி போட்டி முடிவுத் தேதியை 15 - 9 - 62 ஆக மாற்றியுள்ளோம்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

சரவணை

1. சின்னையா சுந்தரமும்
2. பெண் சிவயோகமும்

—வழக்காளிகள்.

இல. M. B 3056

எதிராக

புங்குடுதீவு கிழக்கு மடத்துவெளி

1. கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியமும்
2. பெண் கனகலெட்சுமியும்

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 3056-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணி 1962 ஷு புரட்டாதிமீ 15-ம்வ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 1152 உம் 23-9-59 தொடக்கம் 8-12-59 வரைக்கும் ரூபாய் 750-க்கு 18%வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபாய் 106 உம். இக் கோட்டுச் செலவில் ரூபாய் 80-உம் முதலில் ரூபாய் 400-உம் கொடுபட்டிருக்கிறது.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக தீவுப்பகுதி, புங்குடுதீவுக் கோயிற்பற்று, புங்குடுதீவு கிழக்கு இறை 'கண்டுதேவன் உககமியும், மறுபிரிவுகளும்" பர. நில, இலா. 10-ம், செய்பயிர் வான்பயிர்களும், வீடும். எல்லை கிழகது அண்ணாமலை மாணிக்கத்தின் ஆதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு கை ஒழுங்கை. தெற்கு அம்பலவாணர் பெண் சிவயோகம்மாவுக்குரிய ஆதனம், இதடங்கலும் இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் 305/70-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2 ஷியிறை "தாழ்வு வயல்" நெல்லும், நிலையும் சேர்ந்து பரப்பு 41 5/8. இது நெற்பரப்பு 51-ம், குளி 5¼. இதற்கு எல்லை கிழக்கு கண்ணகையம்மன் கோவில் ஆதனம், வடக்கு இதில் சொல்லிய எதிரிகளின் ஆதனம். மேற்கு தர்மசூரியலிங்கம் பெண் சிவகாமசுந்தரியம்மாவின் ஆதனம். தெற்கு அண்ணாமலை மாணிககத்துக்கும், ஐயம்பிள்ளை வயித்திலிங்கத்துக்கும உரிய ஆதனம் இதில் சொரியலாய் நெல்லும் நிலையும் சேர்ந்து (15) பதினைந்து பரப்பு அல்லது நெற்பரப்பு (18) பதினெட்டும் குளி ஒன்பதும் (9) இதடங்கலும், இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் கந்தோரில் 305/71 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது,

சே. விசாகரேத்தினம்,
கொமிஷனரும்.
விலைமதிப்பாளரும்.
1962ஷு ஆவணிமீ 7வ
133 பருத்தித்துறை ரேட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
M. 104 3-9-62.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 3904

பேதுறுப்பிள்ளைஞானப்பிரகாசம்
சென்பாற்றிக்ஸ் ரேட்டு
யாழப்பாணம்

எதிராக

1. எஸ், சவெரிமுத்துவும் அவர் மனைவி
2. கிறிஸ்றினா
சென்பாற்றிகஸ் ரேட்டு
யாழ்ப்பாணம்

- எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 3904 ஆம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1962 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ம்வ (20-10-62) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 6175ம் 17-2-61 தொடக்கம் 25-7-61 வரையில் ரூபா 4750 க்கு 5 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும்வரையில் முழுத் தீர்வைத் தொகைக்கு 5 வீத வட்டியும். இதில் ரூபா 500/- தீர்வையின்பின் கொடுக்கப்பட்டது.

ஆதன டாப்பு:-

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிக் கோயில் பற்று கரையூரிறை "இயங்கன் [illegible] 11 [illegible] வீட்டுக்குப் போடப்பட்ட அத்தி பாரமும், வீடும் செய்பயிர் வான் பயிர்களும், இதற்கு எல்லை கிழக்கு ரேட்டு, வடக்கு யோசெபு கைம்பெண் செசிலியாவின் ஆதனம், மேற்கு காலஞ்சென்ற பி. மோசெனின் உரிமைக்காரருக்கும், V. J. ராசாவிற்குமுரிய ஆதனங்கள், தெற்கு யோன்பிள்ளை கைம்பெண் கரோலினாவினாதனம். இதடங்கலும்.

க. செல்லத்துரை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
முருகன்-இல்லம்.
இணுவில் 30-8-62.
M. 97 31-8-62

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

=0=

இல: M.B. 4096

சண்முகம் விசயரத்தினம்
நல்லூர் —வழக்காளி,

எதிராக

1. கணபதி சின்னத்தம்பியும் மனைவி
2. வள்ளிப்பிள்ளை

ஆத்திக்காடு - அரியாலை,

—எதிரிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B, 4096 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1962-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 13-ம்திகதி (13-10-62) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 5685-ம் 23-6-61 தொடக்கம் 16-10-61 வரையிலும் ரூபா 4000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுத்தீர்வைத் தொகைக்கு 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 261-75 ம். இதில் ரூபா 3000 1962 சித்திரையில் கொடுபட்டது.

ஆதனடாப்பு:-

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயில்பற்று சிவியாதெரு இறை "ஆத்திக் காட்டு வளவும், மாவடி வளவும், அல்லது ஆத்திக்கோட்டு வளவும்" நில. பர. (11) பதினொன்று குளி (12) பன்னிரண்டும் வீடும் கிணறும் பயிர்களும், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு சடையர் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு சோதிநாதன் பெண் முத்தம்மாவினாதனம், தெற்கு ரேட்டு. இதடங்கலும்.

முற்பதிவு D 227/247.

க. செல்வத்துரை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
முருகன் இல்லம்,
இணுவில், 15-8-62.
M 96 31-8-62.

---

### உள்ளம் தாமரை ......

1-ம் பக்கத் தொடர்ச்சி

போல், நாமும் உள்ளத் தாமரையை வளர்த்து அன்பு-அருள் என்னும் தேனைச் சொரிய வேண்டும்.

"ஈறில்லாப்பதங்கள் யாவையும் கடந்த இன்பமே" என மணிவாசகர் கூறுகிறார் பொறிகளுக்கு இன்பம் தருவன புலன்களுக்கு இன்பம் தரா. புலன்களுக்கு இன்பம் தருவன பொறிகளுக்கு இன்பம் தரா. பொறி, புலன் இரண்டுக்கும் இன்பம் தருவன ஆன்மாவுக்கு இன்பம் தரா.

இந்த உலகம் இறைவனின் அற்புதத்திருமேனியே. இறைவனைப் போற்றுகில் அவனது உடைமை ஆகிய இவ்வுலகத்தைப் போற்ற வேண்டும். உயிர்கள்மேல் அன்புபூண்டு இரக்கங்கொள்ளவேண்டும்.

—0—

### முத்தமிழ்க்காவலர் சொற்பொழிவு

இடைக்காட்டில் இன்று மாலை ஆரம்பமாகும் திருக்குறள் மாநாடு தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெற இருக்கிறது. இன்றைய பேச்சாளர்களுள் வித்துவான் க, வேந்தனார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் ஆகியோர் முக்கியமானவர்கள்.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை [illegible] இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 7-9-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org